# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093625

1. District : மாவட்டம் திண்டுக்கல் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 02 Date: நாள் 08.06.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC Act (Amendment) 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 18.05.2020 and 4.06.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.06.2020 Time : நேரம் 07.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 09.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 5 கி.மீ தென்கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திண்டுக்கல்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. ஜெ.பின் கிறிஸ்டினா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. ஸ்டாலின் திரைராஜ்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. ; வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் பட்டதாரி ஆசிரியை. (g) Address : முகவரி தூய பிரான்சிஸ் சேவியர் மேல்நிலைப்பள்ளி, முத்தழகுபட்டி, திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சுப்பிரமணியம், மாவட்ட கல்வி அலுவலர், திண்டுக்கல் கல்வி மாவட்டம், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 08.06.2020-ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், முத்தழகுபட்டி,தூய பிரான்சிஸ் சேவியர் மேல்நிலைப் பள்ளி, பட்டதாரி ஆசிரியை, P.டேஃப்னி கிறிஸ்டினா, க/பெ V.ஸ்டாலின் துரைராஜ், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை நான் பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: P.டேஃப்னி கிறிஸ்டினா, வயது.45/2020க/பெ V.ஸ்டாலின் துரைராஜ், பட்டதாரி ஆசிரியை, தூய பிரான்சிஸ் சேவியர் மேல்நிலைப் பள்ளி, முத்தழகுபட்டி, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர்: உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். நான் பட்டதாரி ஆசிரியையாக அரசு உதவி பெறும் வடமதுரை,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 08/06/2020.

[signature] 8/6/20
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
08.06.2020, 12.00hrs.

Name: பெயர் J. நாகராஜன்
Rank: நிலை ..................No. எண் .........
காவல் துணைக்கண்காணிப்பாளர்,
ஊ.த.க பிரிவு,

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:2/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

கலைமகள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் இரண்டரை ஆண்டுகளாக பணியாற்றி, கடந்த 02.12.2019ம் தேதியன்று பணி மாறுதல் பெற்று அரசு உதவிபெறும் திண்டுக்கல் முத்தழகுபட்டி தூய பிரான்சிஸ் சேவியர் மேல்நிலைப் பள்ளியில் தற்போது பணியாற்றி வருகின்றேன். நான் கலைமகள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து பணிமாறுதல் பெற்ற டிசம்பர்-2019ம் மாதம் முதல் ஏப்ரல்-2020ம் மாதம் வரையிலான 5 மாத காலத்திற்கான ஊதிய நிலுவைத் தொகை மற்றும் மே-2020க்கான ஊதியத் தொகை, மொத்தம் சுமார் ரூ.3,97,000/-ம் வழங்கப்படாமல் இருந்தது. அதற்கான பட்டியலை நான் தற்போது பணிபுரியும் பள்ளி அலுவலகத்தில் தயார் செய்து அத்துடன் எனது பணிப்பதிவேட்டினையும் சேர்த்து எங்களது பள்ளியிலிருந்து திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலக வேலையாக சென்று வரும் உடற்கல்வி ஆசிரியர் திரு.கார்த்திகேயன் அவர்களிடம் சென்ற மே-2020ம் மாதம் மூன்றாவது வாரத்தில் கொடுத்து அதனை அவர் மாவட்ட கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார். அதன் பிறகு நான் உடற்கல்வி ஆசிரியர் திரு.கார்த்திகேயன் அவர்களிடம் எனது சம்பள நிலுவை தொகை பில் பற்றிக் கேட்டேன். அவர் என்னுடைய பில் திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதாகவும், நீங்கள் சென்று சம்மந்தப்பட்ட இருக்கையில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். எனவே நான் சென்ற 18.05.2020ம் தேதியன்று மதியம் சுமார் 2 மணிக்கு திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு சென்று திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலர் திரு.சுப்பிரமணியம் அவர்களை பார்த்து 5 மாத ஊதிய நிலுவைத் தொகை மற்றும் மே-2020க்கான சம்பள பில் சம்மந்தமாக பார்க்க வந்திருப்பதாகச் சொன்னேன். அதற்கு அவர் உங்கள் பில்கள் என் வசம்தான் உள்ளது. அதை அனுப்புவதற்கு பணம் செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் எவ்வளவு சார் செலவாகும் என்றேன். அதற்கு அவர் ரூ.5,000/- வரை ஆகும், நீங்கள் அதை கொடுத்துவிட்டால் பில்லை உடனே அனுப்பி விடுகிறேன் என்று கூறினார். நானும் சரி சார் ஏற்பாடு செய்து வருகிறேன் என்று சொல்விட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு பில் அனுப்பாமல் தாமதம் ஆகவே நான் மீண்டும் 04.06.2020ம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு

திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகம் சென்று அங்கு பணியிலிருந்த திருமதி.பிலோமினாள் அவர்களை பார்த்து எனது சம்பளம் மற்றும் நிலுவை தொகைக்கான பில் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் சம்பளம் பில் பணியினை பார்க்கும் அலுவலர் திருமதி.கவிதா அவர்களிடம் போனில் பேசினார். அதன்பிறகு அவர், உங்கள் பில் சம்மந்தமான வேலைகள் முடிந்து DEO கையெழுத்துக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது DEO அவர்கள் தேர்வுத்தாள் திருத்தும் பணி நடைபெறும் திண்டுக்கல், புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முகாம் அலுவலராக பணியில் உள்ளார் என்றும், உங்களுடைய பில் மற்றும் பணிப்பதிவேடு அவர் வசம்தான் உள்ளது என்றும், எனவே நீங்கள் அங்கு சென்று DEO வை பாருங்கள் எனக் கூறினார். சரி என்று நானும் திண்டுக்கல் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சென்றேன். அங்கு அப்பள்ளியின் தலைமை ஆசிரியை அறையிலிருந்த DEO திரு.சுப்பிரமணியம் அவர்களை மதியம் சுமார் 1 மணிக்கு பார்த்து எனது ஊதிய நிலுவைத் தொகை பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் வெறும் கையோடு வந்தால் வேலை நடக்காது. இதேபோல் சம்பளத் தொகை நிலுவையில் இருந்தவர்கள் என்னை கவனித்து விட்டு நிலுவைத்தொகையினை பெற்று விட்டார்கள். நீங்கள் மட்டும் பணம் செலவில்லாமல் சும்மா காரியம் நடக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்றார். நீங்களும் நான் ஏற்கனவே சொன்ன ரூ.5,000/-த்தை கொடுத்துவிட்டால் உடனே வேலை நடக்கும் என்றார். அதற்கு நான் சார் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள், எனது குழந்தைகளின் படிப்பு செலவிற்கே சிரமப்படுகிறேன் என்றேன். அதற்கு அவர் நான் ஒன்றும் அதிகமாக கேட்கவில்லை மற்றவர்கள் இதற்காக கொடுத்த தொகையைத் தான் கேட்கிறேன். இதை நீங்கள் கொடுக்க யோசித்தால் நிலுவைத் தொகை பெற அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான் என்று கறாராக சொல்லி, அவர் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை எடுத்துக்கொண்டு தேர்வுத்தாள் திருத்தும் அலுவல் நடக்கும் திண்டுக்கல் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு வந்து முகாம் அலுவலில் உள்ள தன்னிடம் வரும் 08.06.2020ம் தேதி திங்கட்கிழமை மதியத்திற்குள் நேரடியாக கொண்டு வந்து கொடுத்தால் உடனே பில்லில் கையெழுத்து போட்டு அனுப்பிவிடுகிறேன், இல்லாவிட்டால் உங்கள் பில் அப்படியே இருக்கும் என்றார். சரி என்று நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில்

எனது சம்பளம் மற்றும் சம்பள நிலைவைத் தொகையை பெற DEO திரு.சுப்பிரமணியம் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.5,000/-ம் கொடுத்து பெற எனது மனம் விரும்பாததால் எனது 5 மாத சம்பள நிலுவைத்தொகை மற்றும் மே-2020 மாதத்திற்கான சம்பள தொகை பெற ரூ.5,000/- லஞ்சமாக கேட்ட திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவினை கொடுக்கின்றேன். திண்டுக்கல் மாவட்ட கல்வி அலுவலர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம் லஞ்சமாகக் கேட்ட பணம் ரூ.5,000/- கொண்டு வந்துள்ளேன். மேலும் எனது பணி மாறுதல் உத்தரவு நகலினையும் இத்துடன் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் வைரஸ் நோய் தொற்று பரவல் சம்மந்தமாக கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை பின்பற்றி இந்த புகாரை கொடுக்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.டேஃப்னி கிறிஸ்டினா 08.06.2020)

Sir, Received the complaint on 08.06.2020 at 07.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources, complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.02/2020, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 08.06.2020 at 09.00 hrs and took up investigation.

Original FIR along with complaint of Tmt.Daphne Christena, Age.45/2020, W/o.V.Stalin Durairaj, B.T. Assistant,. St.Francis Xavier Higher Secondary School, Muthalagupatti, Dindigul District and with the relevant documents is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

8/6/20

(J.Nagarajan)
Dy.Supdt of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.